ஏலாக்குறிச்சி

தூய

# அடைக்கல அன்னை

## பதிகம்

## மன்றாட்டுகள்

வெளியீடு:

அருள்திரு: V. அந்தோனிசாமி
M.A.B.T.,L.Ph.,L.D.
பங்குகுரு
ஏலாக்குறிச்சி - 621715
[வழி] திருமானூர்
திருச்சி மாவட்டம்

இ6:417x
N92
169331

# ஏலாக்குறிச்சி

# தூய அடைக்கல அன்னை

# பதிகம்

# மன்றாட்டுகள்

மூன்றாம் பதிப்பு
1992

*

Rev. Fr. V. Antonisamy M.A.B.T.
Parish Priest,
Elakkurichy - 621715
Via - Thirumanur Trichy Dt.

# அணிந்துரை

"அருண் மொழிச் செல்வர்"
பேராசிரியர் பா. வளன் அரசு, M.A.,
தூய யோவான் கல்லூரி,
பாளையங்கோட்டை

தஞ்சைப் புலவர் தந்தருளிய திருக்காவலூர்த் திருப்பதிகம் நெஞ்சையள்ளும் வகையில் பத்திச் சுவை பொலிய மிளிர்கிறது. உருக்கமாகவும் உணர்வுப் பெருக்கமாகவும் திகழும் பத்துப் பாக்கலான இச் சிறு நூல் திருக்காவலூர் அடைக்கல அன்னையின் அளப்பரும் பேரருளைப் பாடிப் பரவிடத் துணை புரிகிறது.

ஏலாக்குறிச்சியாக இருந்த சிற்றூர் பதினெட்டாம் நூற்றாண்டில் திருக்காவலூராக மாறியது! கோனான் குப்பம் ஆரியநல்லூராக அமைந்தது. இத்தாலியத் தமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர் நல்ல தமிழ் உணர்வுடன் ஊரெல்லாம் உண்மைத் தமிழ்த் திருப்பேரே திகழ்ந்திடச் செய்தார். அமல அன்னையின் தாமரைத்

திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு இறையடியார் அனைவரையும் உய்விக்க முனைந்தார். நினைந்து நினைந்து வித்தகர் வீரமாமுனிவர் பாடியருளிய பாசுரங்கள் திருக்காவலூர்க் கலம்பகமாக ஒளிரக் காண்கிறோம்

முப்பத்தாறு ஆண்டுகளில் 1711-1747 முப்பத்தாறு நூற்கள் நல்கிய முனிவர் பெருந்தகை திருமறைக்கும் தீந்தமிழுக்கும் ஒப்பில்லாத உயரிய தொண்டாற்றியுள்ளார். "அடைக்கலமாலை"யில் வீரமாமுனிவரே விளம்புவது போன்று அன்னை மரியின் பரிவினை, நேரேகண்டு களிகொண்டு அவள் திருவடி பணிந்து போற்றிப் புகழ்கிறார். அன்னை மரியாளின் அருளால் பதினேழாம் நூற்றாண்டில் 1665 ஆகிர்தமரியாள் வரைந்து வழங்கிய இசுபானிய ஏடாகிய "கடவுளின் நகரம்" கண்டு உவகை மிகக் கொண்டு "தேம்பாவணி" என்னும் காம்பாச் சுவைமிகு காப்பியத்தை மூன்று காண்டங்கள், முப்பத்தாறு படலங்கள், மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாக்களாக உருவாக்கினார். "மறைமொழி வாயினன், மலி

தவத்திறைவன், நிறைமொழிக் குரவன், நிகரில் கேள்வியன்'' என்றெல்லாம் புகழுடன் நின்று நிலவும் வீரமாமுனிவர் தொண்டாற்றிய திருத்தலங்களுள் ஒன்று திருக்காவலூர்.

பதினான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பத்தினைக் கொண்டு ''திருக்காவலூர்த் திருப்பதிகம்'' பாடியுள்ளார் தஞ்சைஅருட்புலவர் தாமசுஅவர்கள். ஊனுருகவும் உளமுருகவும் அன்னை மரியின் மீது பாக்கள் பல பாடியுள்ள புலவர் மணியின் பணிக்கு இப்பதிகம் எடுத்துக்காட்டாக விலங்குகிறது. ''தீஞ்சொற் கவிதையஞ் சோலைதனில் தெய்வீக நன்மணம் வீசும்'' என்ற பாரதியாரின் பாட்டு வரிகளுக்கு மேற்கோள் காட்டும் வகையில், "களிகொண்டு மிக்க பேரளி கொண்டு நிலைகொண்டு காவலூர் வாழும்'' அன்னையிடம் கசிந்துருகி மன்றாடுகிறார்.

கண்ணாலும் வாயாலும் தலையாலும் உள்ளத்தாலும் காளாலும்கையாலும்நெற்

றியாலும்அன்னைக்குஅரும்பணியாற்றிட ஆவல் கொள்ளும் அடியார் திருக்கூட்டம் பெருமை பெறுவது உறுதி என்று நான் காம் பாடலில் நவில்கிறார். நெறிமுறை களைப்பற்றி நினையாது கெட்டழியும் மாந்தரைப்பாடும் திருநாவுக்கரசர், "பால னாய்க்கழிந்த நாளும், பனிமலர்க்கோதை மார் மேலனாய்க் கழிந்த நாளுப் மெலிவு டன் மூப்பு வந்து கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேனே" என்று மொழிந்தார்!

" உன்னுவ தெலாம் தீமை, உரைப்ப தெலாம்வஞ்சம்
ஒருக்காலும் உண்மை வாழும்
உறைவிடம் அறிந்திலேன் பரகதி நினைந்திலேன்
உன்மலர்த்தாள்எண்ணிலேன்
பண்ணுவதெலாம் பழி; படிப்பதெலாம் களவு;
பற்றுவைத் தெந்த நாளும்
பாவிப்ப துலகையே; சீவித் திருப்பதும்
பாழுமுடல் பேணு தற்கே" (பாடல் 6)

என்று திரியும் உலகோரைச் சகத்தே திருத்திட, மனத்தகத்தே நினைந்து நெக்குருகி மரியன்னையை மன்றாடுகிறார். எட்டாவது பாடலில் அன்னையின்பேராற்றலையும் அருளாசீரையும் போற்றிப் பாடுகிறார். பத்தாவது பாடலில் அன்னையும் கன்னியுமாய் மரியாள் மிளிர்வதை முறையாக எடுத்தியம்புகிறார்.

திருக்காவலூர் அன்னைமரியாள் புகழ் பரப்பும் இந்நூல் இறையடியார்க்கு இனிய கனியமுதாக இலங்குகிறது. திருமறைத் தொண்டருக்குப் பத்திப்பனுவலாகத் துலங்குகிறது.

அன்பன்
பா. வளன் அரசு

# என்னுரை

பொன்னி நதி பாயும் கன்னித் தமிழ் நாட்டில் திருச்சி மாவட்டத்தில் கும்பகோணம் மறை மாவட்டத்தைச் சார்ந்துள்ள ஏலாக்குறிச்சிஎன்னும் சிற்றூர், கொள்ளிட நதியின் வடகரையில் அமைந்துள்ளது. தஞ்சாவூரிலிருந்து அரியலூர் செல்லும் சாலையிலுள்ள திருமானூரின் கிழக்கே ஏறத்தாழ 5 கல் தொலைவில் உள்ளது.

இந்தத் திருத்தலத்திற்கு யான் 1971 - ஆம் ஆண்டு சென்றிருந்தேன். வீரமாமுனிவர் வாழ்ந்த அந்தத் திருத்தலத்தைக் கண்டு மகிழ்ந்தேன். அங்குத் திருக்கோயில் கொண்டிருக்கும் அடைக்கல அன்னையைக் கண்டு சிந்தை மகிழ்ந்து என் உள்ளமெல்லாம் உவகை பொங்க முனிவர் இயற்றியருளிய திருக்காவலூர்க் கலம்பகம் என் நாவு இனிக்கப் பாடி மகிழ்ந்தேன்.

முனிவருக்குப் பின் தொடர்ந்து மறைத் தொண்டு ஆற்றிவரும் மறைத் தொண்டர்

களின் சேவைகளையும் கண்டு மிகவும் பெருமை அடைந்தேன். ஆயினும் முனிவருக்குப் பின் தூய மரியன்னை மீது யாரேனும் ஒரு பதிகம் பாடியுள்ளார்களா? என்பதை யான் அறிந்த வரையில் தெரியவில்லை இக்குறையை, தஞ்சைப் பெரும் புலவர் திரு. தாமசு உடையார் அவர்கள் நிறைவு செய்துள்ளார்கள். அன்னவருக்கும், அணிந்துரை வரைந்து கொடுத்த பன்மொழிப் புலவர் பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரிப் பேராசிரியர் திரு. பா. வளன் அரசு **M.A.** அவர்களுக்கும், எமக்கு எவ்வேளையிலும் உடன் இருந்து உதவிவரும் தூய வளனார் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. ந. ம. அருள்பிரகாசம் **M.A.** அவர்களுக்கும், திருக்காவலூர் ஏலாக்குறிச்சி பங்குத்தந்தை **V.** அந்தோணிசாமி **MA.BT.** அவர்களுக்கும் என் நன்றியும் வாழ்த்தும் உரித்தாகுக!

மரியன்னை பக்தன்



# திருக்காவலூர்த் திருப்பதிகம்

## காப்பு

### நேரிசை வெண்பா

கதியாய் அடைக்கலமாய்க் காவலூ
ரென்னும்
பதிவாழும் தாய்க்கோர் பதிகம் --
துதியாகப்
பூவிலே யான்பாடப் பூவையவள்
சேயெனது
நாவிலே நிற்கும் நயந்து

### பதிகம் (1)

உலகமிசை யிலகுதுய ரகலவும்,
புவிமாந்தர்
உய்வுபெற் றேமகிழவும்,
உரியதுணை யாயடைக் கலந்தந்து
காத்திடும்
உயர்தவச் செல்வ மகளாய்

நிலவுபொழி கருணைவிழி திகழவும்,
இருபாத
நிழலடைந் தவரை யாள
நீட்டிய கரங்கள் நெறிகாட்டவும்,
உடுவின்முடி
நின்றுசிர மீ தொளிரவும்,
பலதிசையி னுறுமடியர் குலம்வந்து
கூடவும்,
பக்தருன் புகழ்பா டவும்,
பரவிநின் றவர்குறைகள் இரவிமுன்
பனிபோலப்
பாரினில் அகன் றோடவும்
கலகலெனும் ஒலிபெருகு காவிரியின் வட
கரையில்
கண்கவர் திருக்கோவிலில்
களிக்கொண்டு மிக்க பே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!

(2)

நாவிலுறு கவிகொண்டு வீரமா முனி
கண்டு
நற்றமிழ் புனைந்து பாட
நரகிலுறு மலகையொடு பகையான மாந்
தருளும்
நாணித் தளர்ந்து வாட,

கோவிலுறு மடியவர்கள் குறைகண்டு
தீர்த்தனை;
கொடியனென் குறைக ளெல்லாம்
கூறவும் கேளா திருப்பதுவும் நீதியோ?
குளிர்காவி லுற்ற கிளிதான்
பூவிலுறும் உன்னாம மோதப் புரிந்தனை;
பொல்லாத கழுக கன்றே
போகிடச் செய்தனை; மாபாவி யெனை
யுமிப்
புவியில்வந் தாளல் அரிதோ!
காவிலுறு குயில்பாட மயிலாட முழவுபோல்
காவிரியின் நீர் ஒலிக்கக்
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!

[3]

மருவுபொரு ளாசையொடு பெண்ணாசை
யுங்கொண்டுன்
மலரடி யினைத் துறந்தே
மதிகெட் டலைந்தவன், மறைசற்று
முணராது
மாபாதகம் செய் தவன்,
குருவினுப தேசமும் கொள்ளா தவன்,
திருக்

கோவிலிற் புகுதா தவன்,
குறைதான் மிகுந்தவன், பழியே
சுமந்தவன்,
கொடும்பவச் சுமை பொறாமல்
இருவிழியி னீர்சொரிந் துனதுபத மலர்
கழுவி
என்புருகி நெக்கு விட்டே
எண்ணாதும் எண்ணியே புண்ணாகி
னேன்; இந்த
ஏழையென் துயர் களைகுவாய்
கருதுமொரு குழிநீரி னாற்பிளவை
தீர்ந்திடக்
கருணைசெய் தாண்ட கனியே!
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!

(4)

வாணாளில் உன்வடிவு காணாத
கண்களும்,
வாழ்த்தாத ஊத்தை வாயும்,
வணங்காத சென்னியும், இணங்காத
நெஞ்சுமுன்
வான்பதி புகாத தாளும்,

கோணாது நின்பணிகள் கொள்ளாத
கைகளும்,
குறிதா னிடாத நுதலும்,
கொண்டபழி காரன்நான்; எந்தவிதம்
உன்னடியார்
கூட்டத்தி லொருவன் ஆவேன்?
பூணா யிலங்குமுன் மணிமாலை
பூண்டுகுப்
போதுமுன் னேவல் செய்தே
புகுமடியர் தாளிலுறு புழுதிக்கும் நிகராத
புலையன்நான் உய்வ தெளிதோ!
காணாம லொரு சிவிகை மீதூறும்
அம்மையிவள்
காணென்று கரூத வந்தே
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!

(5)

மதியாய்க் கிடந்துனது பாதஞ்
சுமந்திலேன்;
மலரடித் தேனை யுண்ணும்
வண்டாய்ச் சுழன்றிலேன்; நின்றலத்
தேயுற்று
வளர்பசும் புல்லாகி லேன்;

விதியா யருச்சனை புரிந்திடேன்;
மிகுமற்ப
விசுவர்சி யாய் நடந்தே
வெள்ளையிடு கல்லறைக் கொப்பாகி
யுன்றனருள்
வேதம் சுமந்து நின்றேன்;
துதியாய் மகிழ்ந்தடியர் புகழ்பாட
நின்றவர்
தொழுந் தெய்வமாய் வருந்திச்
சுமைசுமப் போர்தஞ்ச மாயென்றும் ஆளத்
துணைக்கரம் விரித்த நின்பால்
கதியா யடைக்கலம் புகுபாவி
யென்னையும்
காத்தருள வேண்டும் அம்மா!
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!
உன்னுவ தெலாம்தீமை; உரைப்பதெல்
லாம் வஞ்சம்;
ஒருக்காலும் உண்மை வாழும்
உறைவிடம் அறிந்திலேன்; பரகதி
நினைந்திலேன்;
உன்மலர்த் தாள் எண்ணிலேன்;
பண்ணுவ தெலாம்பழி; படிப்பதெல்
லாம்களவு;
பற்றுவைத் தெந்த நாளும்

பரவிப்ப துலகையே, சீவித்தி ருப்பதும்
பாழுமுடல் பேணு தற்கே.
இன்னுமதி கஞ்சொல்ல வேண்டுமோ
அன்னையே!

இந்நிலத் துன்னை யன்றி
என்பவ மனைத்தையும் மன்னித்து
நற்கதியை
ஈயவல் லவர் இல்லையே!
கண்ணளி சுரந்துனது சேயைமன்
றாடியென்
கலிதீர்க்க வேண்டும் அம்மா!
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!
பற்றுடைய னாயுனது பாதம்
பணிந்திலேன்
பாரிலுன் மறை தனக்காய்ப்
பலியான தொண்டரைப் பார்த்தும்
அறிவுற்றிலேன்
பாழுமுடல் பேணுதற்கே
முற்றும் பெருங்கவலை கொண்டதல்
லாலுக
முடிவிலே சம்ப விக்கும்

முறைதா னுணர்ந்தும் உணராதவன்
போலவே
முழுமாயை யுற்றலைந் தேன்;
மற்றுன் திருப்பதியில் வந்தடிய
ரொடுமுனது
மகிமையைக் கண்டு கொள்ளேன்;
மாடாடு போலவே சீவித் திருக்குமென்
மதியையென் னென்று புகழ்வேன்?
கற்றறிவி லாதவென் குற்றம்
பொறுத்தெனைக்
கைதூக்க வேண்டும் அம்மா!
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!
பூமியொடு வானமுதல் யாவும் படைக்கு
மொரு
புத்திரனை நீ படைத்தாய்;
பொற்புமிகு வானவரும் நற்பதம்
பணிகின்ற
புதல்வியா யுற்பவித் தாய்;
தீமைதரு பேய்மகன் சென்னியை
நசுக்கவே
திருவடிக ளைப்பதித் தாய்;

திக்கற்ற பாவியரை யெப்போதும்
ஆட்கொளத்
திகழுமிரு கரம்விரித் தாய்;
மாமறை புரக்கும் அடி யார்துயரை
மாற்றினாய்;
மந்திரித் திட்ட நீரால்
மங்கைசுக மாகவே நன்குதவி
யாற்றினாய்;
மாபெரும் துரோகியாகும்.
காமியென் துயர்களைதல் தானுமொரு
பாரமோ?
கடுகிவர வெகுதூர மோ?
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!
மண்கொண்ட நின்னடியர் போல்துறவு
பூண்டுனது
மலரடித் தொண்டு புரியேன் ;
மணிமாலை கொண்டுனது திருநாம
மோதவொரு
மந்திரம் தானும் அறியேன் ;
முன்கொண்ட மாசினை யகற்றித்
திருந்தவொரு
முயற்சியும் செய்ய நினையேன் ;

முற்றிலுமிவ் வுலகையே பற்றிக்
கிடந்தலையும்
மூடனையும் உந்தன் மகவாய்
தண்கொண்ட பேரருளி னால்புரந்
தாட்கொளத்
தயைகொண்ட தெய்வ மகளுன்
தாளினை மறந்துலகில் வாழுமிப்
பேதைபோல்
தாரணியில் யாரும் உளரோ?
கண்கண்ட தெய்வமாய் வந்தடியர்
தமையெலாம்
கடைக்கணித் தாள வென்றே,
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!
அனியாய மாயிந்த உலகவாழ்
வினை நம்பி
அமைதியை யிழந்து போனேன்;
ஆகாத பாவியாய் அவியாத நரகத்து
அலகையின் அடிமை யானேன்;
தனியா யிருந்துனது தாள்மலர்
பணிந்திடத்
தாசனாய்த் தொண்டு செய்யத்

தவவிரத மேபுரிய நினையாது மதிகெட்ட
சண்டாள னாகும் என்னை
இனியார் புரந்திடுவர்? கதியேது
மில்லையே!
எய்துமொரு தீர்வை நாளில்
என்னபதில் கூறுவேன்? உன்மகவை
மன்றாடி
ஏழையென் துயர் களைகுவாய்.
கனியாகி மற்றுமொரு அனையாகி
வையகம்
காக்குமொரு செல்வி யாகிக்
களிகொண்டு மிக்கபே ரளிகொண்டு
நிலைகொண்டு
காவலூர் வாழும் அனையே!

## பக்தர்களின் பரவச பிரார்த்தனை

பரிசுத்த கன்னிகையே! இதோ உமது திருவடிகளைப் பணிந்து உமது திருக்குமாரனுக்கும் உமக்கும் நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறோம்; எங்கள் ஆத்தும நன்மைக்காகவும், சரீர நன்மைக்காகவும் நாங்கள் அறிந்தும் அறியாமலும் உமது வழியாய் அடைந்த உபகாரங்களுக்காகவும் உமக்குப் புகழ்ச்சியும் நன்றியும் செலுத்துகிறோம். ஓ பரிசுத்த கன்னிகையே! பச்சிளங் குழந்தைகளைக் காப்பாற்றும்; கல்வி கற்கும் சிறுவர்களையும், தேவ ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட வாலிபர்களையும் காப்பாற்றும்; ஆத்தும தொண்டு புரியும் குருக்களையும், துறவிகளையும் ஆதரியும். வியாதிக்காரருக்கு ஆறுதலகவும், வயோதிசருக்கு ஊன்றுகோலாகவும், மரண அவஸ்தையிலிருப்பவர்களுக்கு தஞ்சமாகவும் இரும். அனாதைகளுக்கு அன்னையாகவும் விதவைகளுக்கு அடைக்கலமாகவும் இரும்.

விசுவாசத்தில் தளராமலும், சோதனைகளில் தத்தளியாமலும் பரிசுத்த கற்பில்

உறுதியுள்ளவர்களாகவும் எங்களைக் காப்பாற்றும்.

பிறரன்பிலும், சமாதானத்திலும் அன்னியோன்னிய நம்பிக்கையிலும் எங்கள் இதயங்களை இணைத்துக் காப்பாற்றும், ஆமென்.

## இல்லறத்தின் இதய ஒலி

எப்பொழுதும் கன்னிகையும் சர்வேசுரனுடைய மாதாவுமாயிருக்கிற பரிசுத்த மரியே! இதோ, இன்றைக்கு எங்களுடைய இராக்கினியும் எங்களுடைய பாதுகாவலியும் எங்கள் பரிந்துரையாளருமாய் உம்மைத் தெரிந்து கொள்கிறோம்; உம்மை ஒருபோதும் நாங்கள் மறுதலிப்பதில்லையென்றும் உமக்கு வருத்தம் தரும் வார்த்தையொன்றும் சொல்வதுமில்லையென்றும், அத்தகைய கிரிகையொன்றுஞ் செய்வதில்லை என்றும், உம்முடைய மகிமைக்குப் பங்கம் எவராலும் வருவிக்க மாட்டோமென்றும் உறுதியான தீர்மானஞ் செய்கிறோம். எங்களுடைய அந்தஸ்தின்

கற்பை நாங்கள் காப்பாற்றுவதிலும், எங்கள்கடமைகளை நிறைவேற்றுவதிலும் உமது வல்லபமுள்ள பரிந்துரையினால் பிரமாணிக்க முள்ளவர்களாயிருப்போமென்று வாக்களிக்கின்றோம்.

ஓ...பரிசுத்த அடைக்கல அன்னையே! உமது பரிந்துரையினாலே சர்வேசுரன் எங்களுக்குக் கொடுத்து அருளும் பிள்ளைகளை நாங்கள் தேவ பயபக்தியில் வளர்ப்போமென்று உமக்கு முன்பாக உறுதியான தீர்மானம் செய்கிறோம்.

நாங்கள் உமது ஊழியத்தில் எப்போதும் நிலைத்திருக்கும்படியாக எங்கள் எல்லாச் செயல்களிலும் உதவி புரிய வேண்டுமென்றும், சிறப்பாக எங்கள் மரணநேரத்தில் எங்களைக் கைவிடாதேயுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம்

ஆமென்

1911-ஆம் ஆண்டு வெளிவந்த நூலிலிருந்து, தழுவி அமைக்கப்பட்டது.

## முனிவரின் சமயத்தொண்டு

வீரமாமுனிவர் தமிழுக்குத் தொண்டு செய்தமையைத் தமிழ் உலகத்தார் அறிவர். வீரமாமுனிவர் சமயப் பணியை இறை உலகு உலகில் பரவ அவர் ஆற்றிய மறைப்பணியை - பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். தமிழ்ச் சமுதாயத்தை இறை மக்களாக்க அவர் ஆற்றிய தொண்டை-அவர் ஆன்ம வேட்கையை - தணியாத தாகத்தைப் பலர் அறிந்திருக்க முடியாது.

தேம்பாவணி, திருக்காவலூர்க்கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல நாயகி வெண் கலிப்பா எனப் பல பாக்களைப் பாடினார் என்று மட்டும் நாம் சொல்வோம் இலக்கியப் பணி மிகுதியாக ஆற்றியுள்ளார். அந்த அளவுக்கு [illegible] சமயப் பணி ஆற்றியது இல்லை என்றுகூடச் சிலர் சொல்லுகின்றனர்.

தேம்பாவணியை முழுமையாகக் கற்ற
வர்கள் நமது கிறிஸ்துவ மெய்ம்மறையை
- மறையுண்மைகளைக் கண்டு சுவைக்
கின்ற பொழுதுதான் முனிவரின் ஆழ்ந்த
கன்றமறையுணர்வை நாம் உணரமுடியும்.

அவர் மறை இலக்கியப்பணி ஒருபுறம்
இருக்க, அவர் கத்தோலிக்க கிறிஸ்துவ
சமயத்துக்கு ஆற்றிய பெரும்பணிகளை
இங்கு முறையாகக் காண்போம்.

1680 நவம்பர் 8 – இல் இத்தாலியில்,
காஸ்திக்கிலியோனே என்னும் ஊரில்
பிறந்தார். நமது முனிவர். ஜோசப்பெஸ்கி
என்பது இவர் இயற்பெயர். 1698 - இல்
சேசு சபையில் சேர்ந்தார். 1709 - இல்
குருத்துவம்பெற்றார் 1710-இல் லிஸ்பன்
துறைமுகத்திலிருந்து இந்தியாவுக்குப்
புறப்பட்டார்; கோவா துறைமுகத்தைய
டைந்தார். 1711 - இல் மதுரை மறைமா
நிலத்தில் காமநாயக்கன்பட்டி, குருக்கள்
பட்டி, ஆவூர் ஆகிய இடங்களில் சமயப்
பணி ஆற்றினார்; 1712ல் சோழமண்டலத்
தில் எயிலூரில் ஓர் ஆலயம் எழுப்பினார்;

அங்கே 336 பேருக்குத் திருமுழுக்காட்டி அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கினார். 1714-ல் குருக்கள் பட்டியில் தோமையார் திருநாளன்று, அப்போது ஏற்பட்ட சமய எதிர்ப்புச் சதியினால் நம் முனிவர் சிறைப் படுத்தப்பட்டார். அவரைக் கொண்று போட அப்பகுதி தலைவன் ஒருவன் ஆணையிட்டான். இறையருளால் முனிவர் விடுதலை பெற்றார். ஆறு மாதங்கள் சமயப்பணிக்கு ஓய்வு! தமிழ் இலக்கண இலக்கியங்கள் பயின்றார்; பலரும் வியக்கும் அளவுக்கு மொழித்திறம் பெற்றார். குருக்கள்பட்டியில் 1715-இல் 373 பேரைத் திருமுழுக்காட்டி நம் திருமறையில் சேர்த்தார் 1716-இல் ஏலாக்குறிச்சிக்கு வந்தார் அப்போது அவர் தஞ்சாவூர்ப் பங்கையும் சேர்த்துக் கவனித்து வரவேண்டியதாயிற்று. முனிவர் இரண்டையும் கவனித்து வருகையில் மதுரைப் பங்குக்குரு இறந்து போனார். முனிவர் மதுரைக்கு வந்து அதிலிருந்து சம்மட்டியூர் சென்றார். அங்கே கோயில் ஒன்றும் சுவாமியார் இல்லம் ஒன்றும் எழுப்பினார். அதே ஆண்டிலேயே ஏலாக்குறிச்சி சென்று கர்த்தர் பிறப்பு

விழாக் கொண்டாடினார். அவ்வாண்டிலேயே மதுரையில் 100 பேரையும், தஞ்சாவூரில் 453 பேரையும் கிறிஸ்தவர்களாக்கினார். 1717-இல் ஏலாக்குறிச்சியில் அவர் தொடர்ந்து இடைவிடாமல் பணியாற்றுகையில் அவர் முதுகில் ஒரு பிளவை புறப்பட்டது. அதனால் நெடுநாட்கள் துன்புற்றார். சில மாதங்கள் ஓய்வுக்குப் பின் 1719-இல் வடுகர்பட்டிக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவ்வாண்டும், அடுத்த ஆண்டும் புதுக்கிறீஸ்துவர்களுக்கு ஞான ஒடுக்கம் கொடுத்தார். ஞான முயற்சி மறையுரைகளை ஆற்றினார். 1722 - இல் பயணம் செய்கையில் அவர் தவறிவிழுந்ததால் அவரது வலக்கையில் முறிவு ஏற்பட்டது. அதனால் பல மாதங்கள் எழுத முடியாமல் துன்புற்றார். 1726ல் புனித அருளானந்தருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் கொடுப்பதற்கு வேண்டிய வாக்கு மூலச் சான்றுகள் திரட்ட மயிலாப்பூர் வண. ஜோசப் பின்னேயிறோ ஆண்டகையவர்களுடன் சேர்ந்து மறவ நாட்டிற்குச் சென்றார். 1727 இல் தஞ்சாவூர் திரும்பி வந்தார். அங்கு 337 பெரிய ஆட்களுக்கும்

1025 குழந்தைகளுக்கும் ஞான நீராட்ட ளித்தார். அந்நாளில் விசுவாசத்தில்மக்கள் தவறாதிருக்க வேத விளக்கம் எழுதினார். 1729 - இல் ஏலாக்குறிச்சியில் அடைக்கல அன்னைக்கு விழா எடுத்தார். விழாவிற்கு மறுநாள் இறந்தோர்க்காகத் திருப்பலி நிறைவேற்றினார். சுற்று வட்டார மக்கள் அனைவரும் விழாவில் கலந்து கொள்ளத் திரண்டு வந்தனர். அன்று 100 பேர் திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபை உறுப் பினர் ஆனார்கள். அன்று தொடங்கிய விழா இன்றும் நிகழ்ந்து வருகின்றது.

1727-இல் நம்முனிவர் பங்கில் திருமு ழுக்குப் பெற்றோர் எண்ணிக்கை 1135. 1730-இல் மதுரை மறைமா நிலப் பங்குக ளில் பணியாற்றிய உபதேசிமார்களுக்கு ஞான ஒடுக்கம் கொடுத்தார் அவ்வாண்டு 225 ஆட்களுக்கும் 734 குழந்தைகளுக்கும் ஞான நீராட்டளித்தார் 1731 - இல் 312 ஆட்களுக்கும் 785 குழந்தைகளுக்கும் திரு முழுக்கு அளித்தார். அடுத்த ஆண்டில் 205 ஆட்களும் 708 குழந்தைகளும் அவ ரால் திருமுழுக்குப் பெற்றுத்திருச்சபையில்

சேர்ந்தனர் 1733ல் 123 ஆட்களும், 1000 குழந்தைகளும் திருநீராட்டுப் பெற்றனர். அடுத்த ஆண்டு 123 ஆட்களும் 437 குழந்தைகளும் ஞான தீட்சை பெற்று நம் அருமறையில்சேர்ந்தனர். அதேஆண்டில்தான் அதாவது 1734 ஆகஸ்ட்டுத் திங்கள் 5ஆம் நாள் ஏலாக்குறிச்சி நாயனார் அன்னைக்குக் கோயிலும் அறைவீடும் கட்ட முனிவர் அவர்களிடம் நிலம் வழங்கினார். அடுத்த ஆண்டில் முனிவரால் ஞானதீட்சை பெற்றவர் 177 ஆட்களும் 355 குழந்தைகளுமாம். அடுத்துச் சில ஆண்டுகள் நாட்டில் போர்க்குழப்பம் நிலவியதால்அக்காலத்தே முனிவர் தூத்துக்குடியிலும், மணப்பாட்டிலும் வாழ்ந்தார். 1746, 47 ஆண்டுகளில் அம்பலக்காட்டு மடத்தைக் கவனித்து வந்தார். அங்கே தான் முனிவர் தம் அறுபத்தாறாம் வயதில் இறைவன் திருவடி நிழல் எய்தினார். தமிழ்நாட்டில் முனிவர் 36ஆண்டுகள் உழைத்திருக்கின்றார் இவ்விதமாய், முனிவர் இறையரசைப் பரப்புவதற்கும் தமிழ் இலக்கியத்தில் இறைச்சமய இலக்கியப் பணியாற்றுவதற்கும் தம்வாழ் நாளைச் செலவழித்தார்; வையகம்

தழைக்க, வானரசுபரவ, தன்னால்முடிந்த அனைத்தையும் செய்துள்ளார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி அல்லவா!

---

என் முகத்தைப் பார்த்திங் கெனக்குக்
கிருபை செய்ய
உன்முகத்தை யல்லாற்பின் ஓர்முகத்தைக்
காணேனே
நன்முகத்தைக் காட்டி நமஸ்கரிக்கும்
ஆன்மாக்கள்
தன்முகத்தை நோக்குஞ் சர்வேசன்
மாதாவே.

*புலவர் அந்தோனிகுட்டி அண்ணாவியார்*

1882-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட

## தேவதோத்திர சங்கீதக் கீர்த்தனம்

என்ற நூலிலிருந்து ஒரு கீர்த்தனம்
இராகம்-ஆனந்த பைரவி-ஆதிதாளம்

பல்லவி

திருக்காவல் செய்அன்னை - செய்தி
கேளன்றோ - யான்
சொல்லக்கேளன்றோ!

அநுபல்லவி

மருக்கா நிழற்றயாப - மலி அடைக்கலத்
தாயாம்
(திருக்காவ)

சரணங்கள்

தாவீதினத்தொரு மாது-இனிய
தயைமிக இங்கொருபோது
மேவினளாம் ஒரு தீது-சென்ம
வினை இவட்கே அணுகாது
நிறையோர்

ஓவிய வடிவினள்-இளமையிலுணர்வினள்
உலகுயிர் வருகென்று-அறையோர்
தீவிய மொழியினள்-கருணைய விழியினள்
திருமணமிடை நொந்து-இறையோர்
ஏவிய வனமொடு-வளனறைக் கொடி
யிடை

எய்தினளிடரென்று-மறையோர்
ஆவிய வருநிலை-அறி நலமொரு குடை
அணியென அணுகின்று-ஆ, சீலி
அவனிக்கனுகூலி-அருள் செய் பரிபாலி
அவியா ஒளிர் மாலி-அவளாமன்றோ......
(திருக்)

மீனணிந்தாள் முடி மீதில்-திகழ்
விதி அணிந்தாள் அடிப்போதில்
பானணிந்தாள் உடைகேதில்-மிகு
பரிவணிந்தாள் புரி பாதில்
என்றுங்

கானக மணி புவி-சிறை அற வருமுரு
கறை அற ஒரு கன்னி-நின்று
தேனக முகையென-நிலமனை
உமிழினள்
சிறிதொர்ரு குகை துன்னி-அன்று
வானக முள தள-மணி அணி பணிதர
மகிழுவள் மகனுன்னி-குன்று
நூனக மிகுவெகு - வரையறையில நல
னுகருவளுரை முன்னி-ஆ வேதி

ஆதி உறையுஞ் சோதி-ஆவிதெளியும் ஓதி
அரிய மோட்ச வீதி-அவளாமன்றோ......
(திருக்)

சீரளவோ ஒரு வேலை - என்றும்
செய்தயையோ ஒரு சோலை
ஈரறமோ ஒரு மாலை - அருள்
ஈகையதோ ஒரு சாலை

எங்கும்

சாரெனப் பயனிறை-மொழியினு
மிடிகெடக்
கரை அற அருணெஞ்சம்-பொங்கும்
நீரென ஒளியுளி - குளிருற வினையுறு

நிரவிய இவள் தஞ்சந் - தங்கும்
பாரிடை நவைவளர்-வினையொடுபகை

பசி பிணி படை பஞ்சங் - குங்கும்
நேரியை அருளிடும் - அலகையை
நெகிழ்வன
நிலைதரு நிறை புஞ்சம்-அறவீரி

அருள் பொழிந்த மாரி – அன்பு நிறைந்த
வாரி
அமலனீன்ற நாரி - அவளாமன்றோ ......
(திருக்)

ஆரடா பேயேநீ அஞ்சாமல் என்னுடனே
போரடா செய்யப் புறப்பட்டாய் - வீரப்
படைக்கலமாக் கொண்டேன் நான்
ப[illegible]டு(உ)னைத் தேய்த்து
அடைக்கலமா[illegible]

- *மாயூரம் வேதநாயகம் பிள்ளை*

26

விலை 2 ரூபாய்

வீரமாமுனிவர் மின் அச்சகம் ஏலாக்குறிச்சி